# செய்தி வெளியீடு

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(அடிப்படை 2021=100): டிசம்பர் 2024

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**

**நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு**

**தொலைபேசி: 011-2147414 தொலைநகல்: 011-2877945 மின்னஞ்சல் prices@statistics.gov.lk**

2024 டிசம்பர் மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு.) பற்றிய அறிக்கையை வெளியிடுகையில் தொகைமதிப்பு, புள்ளிவிபர பணிப்பாளர் நாயகம், தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருட மாற்றத்தினால் (கடந்த வருடத்தின் அதே மாத தே.நு.வி.சு. மீது நடப்பு மாத தே.நு.வி.சு. இல் சதவீத மாற்றம்) அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கமானது -2.0% ஆக கணக்கிடப்பட்டுள்ளது என தெரிவித்தார். 2024 நவம்பர் மாதத்தின் பொருட்டு பதிவாகிய முதன்மைப் பணவீக்கம் -1.7% ஆக இருந்தது. 2024 டிசம்பர் மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்க வீதத்திற்கான பங்களிப்புக்கள் முறையே -0.4% மற்றும் -1.6% ஆக காணப்படுகின்றன. மாதாந்த அடிப்படையில் உணவுப் பிரிவின் வருடத்தின் மீது வருட பணவீக்கமானது 2024 டிசம்பர் மாதத்தில் 2024 நவம்பர் மாதத்தில் பதிவாகிய 0.0% இல் இருந்து -1.0% இற்கு குறைவடைந்துள்ளது. உணவல்லாப் பிரிவின் வருடத்தின் மீது வருட பணவீக்கம் 2024 நவம்பர் மாதத்தில் பதிவாகிய -3.1% இல் இருந்து 2024 டிசம்பர் மாதத்தில் -2.9% வரை அதிகரித்துள்ளது.

மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிடுகையில், 2024 நவம்பர் மாதத்தில் பதிவாகிய 202.4 இலிருந்து 2024 டிசம்பர் மாதத்தில் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு.) (அடிப்படை 2021=100) 204.6 க்கு அதிகரித்துள்ளது. இது 2024 நவம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் 2.2 சுட்டெண் புள்ளிகள் அல்லது 1.09 வீத அதிகரிப்பைக் காட்டுகிறது. உணவுப் பொருட்களில் ஏற்பட்ட 1.14% அதிகரிப்புகள் மற்றும் உணவல்லாப் பொருட்களில் ஏற்பட்ட 0.05% குறைவுகள் முறையே இந்த மாதம் மீது மாத மாற்றத்திற்கு பங்களித்தது.

உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்புகள் பிரதானமாக காய்கறிகள், தேங்காய், அரிசி, பச்சை மிளகாய், புதிய மீன், பெரிய வெங்காயம், தேங்காய் எண்ணெய், உருளைக் கிழங்கு கோழி இறைச்சி, புதிய பழங்கள், சிவப்பு வெங்காயம், மஞ்சள் தூள் மற்றும் புளி ஆகியவற்றின் பொருட்டு பதிவாகின. எவ்வாறாயினும், தேசிக்காய், முட்டை மற்றும் சோயா மீட் என்பவற்றின் பொருட்டு சுட்டெண் பெறுமதிகளில் குறைவுகள் பதிவாகின.

முந்தைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2024 டிசம்பர் மாதத்தில் உணவல்லாப் பொருட்களின் சுட்டெண் பெறுமதிகளின் குறைப்புகளுக்கு பிரதான காரணம் 'தளபாடம், குடித்தன உபகரணம் மற்றும் வழமையான குடித்தன பராமரிப்பு' மற்றும் அற்ககோல் பானங்கள், புகையிலை மற்றும் மதிமயக்க மருந்துகள்' (பாக்கு), போக்குவரத்து (பெற்றோல் மற்றும் டீசல்), பொழுதுபோக்கும் கலாசாரமும்' மற்றும் 'ஆடையும் காலணியும்' (காலணி) ஆகிய பிரிவுகளில் ஏற்பட்ட விலை குறைப்புகளாகும். எவ்வாறாயினும், 'உணவகங்கள் மற்றும் ஹோட்டல்கள்' பிரிவில் விலை அதிகரிப்புகள் பதிவாகின. மேலும், 'வீடமைப்பு, நீர், மின்வலு, எரிவாயு, ஏனைய எரிபொருள்கள்' மற்றும் நானாவித பொருட்கள் மற்றும் சேவைகள் பிரிவுகளில் மிகவும் குறைந்த விலை அதிகரிப்புகள் பதிவாகின. அதேநேரம் 'சுகாதாரம்', 'தொடர்பாடல்' 'கல்வி' ஆகிய பிரிவுகளில் விலைக் குறியீடுகள் இந்த மாதத்தில் மாறாதிருந்தன.

2024 டிசம்பர் மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு.) (அடிப்படை 2021=100) அடிப்படையான வருடத்தின் மீது வருட மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறு பொருளாதாரத்தில் தளம்பலுறும் உணவு, வலு மற்றும் போக்குவரத்து போன்றன தவிர்ந்த மூலாதார பணவீக்கத்தை பிரதிபலிக்கும் மையப் பணவீக்கமானது 2024 நவம்பர் மாதத்தில் பதிவான 1.5% இல் இருந்து 1.3% இற்கு குறைவடைந்துள்ளது.

### தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை 2021 = 100), தே.நு.வி.சு.(மைய), வருடத்தின் மீது வருட முதன்மை மற்றும் வருடத்தின் மீது வருட மைய பணவீக்கம்.




## தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2021 = 100)

| வருடம் | மாதம் | சுட்டெண் | | | | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | | வருடத்தின் மீது வருட பணவீக்க % | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தே.நு.வி.சு (முதன்மை) | | | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு (முதன்மை) | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு (முதன்மை) | | | தே.நு.வி.சு (மையம்) |
| | | அனைத்து பொருட்கள் | உணவு | உணவு அல்லாத | அனைத்து பொருட்கள் | | | அனைத்து பொருட்கள் | உணவு | உணவு அல்லாத | அனைத்து பொருட்கள் |
| **2023** | டிசெம்பர் | 208.8 | 236.2 | 191.2 | 189.7 | 1.4 | 0.2 | 4.2 | 1.6 | 6.3 | 0.9 |
| **2024** | ஜனவரி | 215.0 | 242.4 | 197.3 | 193.9 | 3.0 | 2.2 | 6.5 | 4.1 | 8.5 | 2.2 |
| | பெப்ரவரி | 214.5 | 239.5 | 198.3 | 194.6 | -0.2 | 0.4 | 5.1 | 5.0 | 5.1 | 2.7 |
| | மார்ச்சு | 210.0 | 234.4 | 194.3 | 194.5 | -2.1 | -0.1 | 2.5 | 5.0 | 0.7 | 3.4 |
| | ஏப்ரல் | 208.2 | 231.1 | 193.4 | 193.9 | -0.9 | -0.3 | 2.7 | 3.3 | 2.3 | 3.0 |
| | மே | 206.3 | 227.3 | 192.8 | 193.6 | -0.9 | -0.2 | 1.6 | 0.5 | 2.4 | 3.1 |
| | யூன் | 208.1 | 232.8 | 192.1 | 193.7 | 0.9 | 0.1 | 2.4 | 1.9 | 2.7 | 3.9 |
| | யூலை | 206.9 | 234.0 | 189.4 | 193.7 | -0.6 | 0.0 | 2.5 | 2.9 | 2.2 | 3.0 |
| | ஆகஸ்ட் | 204.1 | 229.7 | 187.6 | 193.0 | -1.4 | -0.4 | 1.1 | 2.3 | 0.2 | 2.3 |
| | செப்ரெம்பர் | 203.1 | 227.9 | 187.1 | 192.5 | -0.5 | -0.3 | -0.2 | 0.5 | -0.7 | 1.9 |
| | ஒக்ரோபர் | 202.1 | 227.1 | 186.0 | 192.4 | -0.5 | -0.1 | -0.7 | 1.3 | -2.3 | 1.7 |
| | நவம்பர் | 202.4 | 228.0 | 185.9 | 192.2 | 0.1 | -0.1 | -1.7 | 0.0 | -3.1 | 1.5 |
| | டிசெம்பர் | 204.6 | 233.9 | 185.7 | 192.1 | 1.1 | -0.1 | -2.0 | -1.0 | -2.9 | 1.3 |

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்